TAM206B

# Picture 1



**படக்கதையின் முன்பக்கத்தைக் காட்டிக் குழந்தைகளிடம் கேள்வி கேட்டு அவர்களின் மனவோட்டங்களைக் கூறச்செய்யவும்.**

# Picture 2



1. படத்தில் காணப்படும் விலங்குகள் யாவை? படத்தில் என்னென்ன விலங்குகள் காணப்படுகின்றன?
2. விலங்குகள் எந்த இடத்தில் இருக்கின்றன?
3. குரங்கும் ஆமையும் யாராக இருக்கலாம்?

கரும்பலகையில் :

ஆற்றங்கரையில் ஒரு குரங்கும் ஆமையும் வாழ்ந்து வந்தன

# Picture 3



1. ஆற்றில் எது மிதந்து வருகிறது?
2. ஆற்றில் ஒரு பொருள் மிதந்து வருவதை நாம் எப்படி அழைப்போம்?

கரும்பலகையில் :

ஒருமுறை ஆற்றில் ஒரு வாழை மரம் மிதந்து வந்தது.

# Picture 4




1. குரங்கும் ஆமையும் என்ன செய்கின்றன?

கரும்பலகையில்:

குரங்கும் ஆமையும் சேர்ந்து வாழை மரத்தைக் கரைக்குக் கொண்டு வந்தனர்.

# Picture 5




1. குரங்கும் ஆமையும் படத்தில் என்ன செய்கின்றன?
2. குரங்கும் ஆமையும் கனவில் எதைக் கற்பனை செய்து பார்க்கின்றனர்?

கரும்பலகையில்:

இருவரும் வாழை மரம் வளர்க்க ஆசைப்பட்டனர்.

# Picture 6


தனக்கு மேல் பாகம் தான்
வேண்டும் என்று குரங்கு
அடம் பிடித்தது. அது
வேகமாக குலை தள்ளும்
என்று அந்த முட்டாள்
நினைத்து விட்டது.
10
ஆமைக்குக் கீழ் பாகம் கிடைத்தது.

1. குரங்கு எதைத் தூக்கிச்செல்கிறது?
2. ஆமை எதைத் தூக்கிச் செல்கிறது?
3. எத்தனை வாழை மரங்கள் குரங்கிற்கும் ஆமைக்கும் கிடைத்தன?
4. வாழை மரத்தை குரங்கும் ஆமையும் எவ்வாறு பங்கு போட்டுக்கொண்டன?

கரும்பலகையில்:

வாழை மரத்தின் மேல்பாகத்தை அடம்பிடித்து குரங்கு எடுத்துக்கொண்டது. வாழை மரத்தின் கீழ் பாகத்தை ஆமை எடுத்துக்கொண்டது.

# Picture 7




**1. குரங்கும் ஆமையும் என்ன செய்கின்றனர்?**

கரும்பலகையில்:

வாழைக்குத் தண்ணீர் ஊற்றுகின்றனர்.

# Picture 8



1. குரங்கினுடைய வாழைக்கு என்னவானது?
2. ஆமையினுடைய வாழைக்கு என்னவானது?
3. வாடிய வாழையைப் பார்த்த குரங்கின் மனநிலை என்னவாக இருக்கும்?

கரும்பலகையில்:

குரங்கின் மேற்பகுதி வாழை காய்ந்து போனது. ஆமையின் நன்கு வளர்ந்தது.

குரங்கு கவலையுடனும் ஆமை மகிழ்ச்சியாகவும் இருந்தன.

# Picture 9




1. படத்தில் நீ என்ன காண்கிறாய்?
2. அது யாருடைய வாழை மரம்?
3. வாழைப்பழத்தைத் தின்ன யார் யாரெல்லாம் பகலில் விருந்தினராக வந்தனர்?

**கரும்பலகையில் :**

**வாழை மரம் வளர்ந்து பெரிதாகி குலை தள்ளியது. அணில்களும், தேனீக்களும், காகங்களும் வாழைப்பழத்தைத் தின்ன பகலில் விருந்தினராக வந்தனர்.**

# Picture 10



1. வாழைப்பழத்தைத் தின்ன யார் யாரெல்லாம் இரவில் விருந்தினராக வந்தனர்?
2. நிறைய பேர் விருந்தினராக வாழைப்பழம் தின்ன வந்ததைப் பார்த்த குரங்கின் மனநிலை என்னவாக இருக்கும்?

கரும்பலகையில்:

வவ்வால்களும் ஆந்தையும் இரவில் விருந்து வாழைப்பழ விருந்து சாப்பிட வந்தனர். இதைப் பார்த்த குரங்கு வருந்தியது.

# Picture 11




1. வாழைப்பழம் முற்றியவுடன் நாம் என்ன செய்வோம்?
2. ஆமையால் தனியாக வாழைக்குலையை வெட்டமுடியுமா?
3. ஆமை வாழைக்குலையை வெட்ட யாரிடம் உதவி கேட்கும்?

கரும்பலகையில்:

ஆமை வாழைக்குலையை வெட்ட குரங்கிடம் உதவி கேட்டது. இருவரும் சேர்ந்து வாழைக்குலையை வெட்டினர்.

# Picture 12



1. இந்த மிருகங்களின் பெயர்கள் என்ன? ஏன் அவர்கள் இங்கு நிற்கின்றனர்?
2. குரங்கும் ஆமையும் வாழைப்பழங்களை என்ன செய்வார்கள்?

கரும்பலகையில்:

கரடி, முயல், பன்றி, மான் மற்றும் கிளி ஆகியன வாழைப்பழம் தின்ன வந்தன. குரங்கும் ஆமையும் மீதி பழங்களைப் பிரித்துக்கொண்டனர்.